# “ சமகாலத்தில் மாணவர்களின் கல்வியில் தனியார் வகுப்புக்களின் தாக்கம் - ஓர் விமர்சனக் கோட்பாட்டு மெய்யியல் நோக்கு”

பெயர் :- செல்வி. பரமேஸ்வரன் குணாளினி

பதிவு இலக்கம் :- **EU/IS/2017/AC/591**

சுட்டெண் :- **CS 8291**

LIBRARY
0 4 SEP 2024
EUSL, SRI LANKA

மெய்யியல் சிறப்புக் கற்கையின் கலைமாணிப் பட்டத்தின் ஒரு பகுதித் தேவையினை நிறைவு செய்யும் பொருட்டு கிழக்குப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தத்துவவியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை,

கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

2023.

FAC 1387
Project Report
Library - EUSL

## ஆய்வுச் சுருக்கம்

எந்த ஒரு நாட்டின் முழுமையான அடிப்படை வளர்ச்சிக்கும் கல்வியே இன்றியமையாத கருவியாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே கன்னங்கரா அவர்களினால் இலவசக் கல்வியானது இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற இலவசக் கல்விக் கொள்கையினால் ஆரம்ப நிலைப் பாடசாலைக்குச் செல்கின்ற அனைத்துக் குழந்தைகளும் கல்வியறிவைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதால் தெற்காசியாவில் அதிகளவு கல்வியறிவு உள்ள நாடுகளில் இலங்கையும் ஒன்றாகக் காணப்படுகின்றது. இருப்பினும் வழங்கப்படுகின்ற கல்வி வாய்ப்புக்களில் தரமான கல்வியைப் பெற்றுக் கொள்வதில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இலங்கையில் குறைந்த வருமானங்களைப் பெறுகின்ற குடும்பங்கள் போன்ற பின்தங்கிய நிலையில் உள்ளவர்களின் கல்வியில் சமூக ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றது.

ஜனநாயக இலங்கை இலவசக் கல்விக்குப் புகழ்பூத்த நாடாக இருந்தும் கூட இன்று அந்த இலவசக் கல்வி கூட பண பலம் படைத்தவனுக்கே இலகுவாக கிடைப்பனவாக இருக்கும் என்ற எழுதப்படாத நியதியே இன்றைய சமகாலத்தில் மறுக்கப்படாத உண்மையாக காணப்படுகின்றது. இத்தகைய நிலையானது சமகாலத்தில் சமூகங்களில் பாரிய பிரச்சினையினை ஏற்படுத்தி வருவது மட்டுமல்லாது எதிர்காலத்தில் கல்வியை பணத்திற்காக விற்கும் பண்டப் பொருளாகப் பார்க்கின்ற நிலைக்கு போவதற்கான வாய்ப்புக்களே அதிகம் காணப்படுகின்றன. இதனடிப்படையில் நடுத்தர வர்க்கத்தினராலோ, உயர்ந்த வர்க்கத்தினராலோ ஏழை மாணவனின் உணர்வுகளைப் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது. அனைவருக்கும் சமமாக கிடைக்க வேண்டிய கல்வி ஒவ்வொரு மனிதனினதும் அடிப்படை உரிமையான கல்வி அனைவருக்கும் சமத்துவமான முறையில் கிடைப்பதில்லை.

சமகாலத்தில் தனியார் வகுப்புக்களின் அதிகரிப்பானது பாடசாலைகளின் கல்வி முறைகளை கேள்விக்குட்படுத்தும் நிலையினை உருவாக்கி வருகின்றது. அதுமட்டுமன்றி பாடசாலைக் கற்றலில் நம்பிக்கையின்மை இலகுவாக உருவாக்கப்படுகின்றது. அரச பாடசாலைகளில் கல்வி கற்கின்ற அனைத்து மாணவர்களாலும் தனியார் வகுப்புக்களுக்குச் சென்று தம் கற்றலை மேற்கொள்ள முடியாது. நாளாந்த அடிப்படை வசதிகளையே பூர்த்தி செய்ய முடியாதவர்களுக்கு தனியார் வகுப்புக்கள் ஆடம்பரப் பண்டமே ஆகும். அரச பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற அதே ஆசிரியர்கள் தான் தனியார் வகுப்புக்களிலும் கற்பித்து வருமானத்தை பெற்றுக் கொள்கின்றனர்.

திறமையான ஏழை மாணவர்கள் கூட, பரீட்சையில் சித்தியடைய பாடசாலைக் கல்வி மட்டும் போதாது என்ற மனநிலையினை தங்களுக்குள் விதைத்துக் கொண்டு தங்களின் முயற்சிகளினை கைவிடும் அளவிற்கு இன்றைய புறச்சூழல் தாக்கம் செலுத்துகின்றது. பரீட்சையில் வெற்றியடைகின்ற மாணவர்களினது வெற்றியினை உரிமை கோருகின்ற தனியார் கல்வி நிறுவனங்கள் அதே நிறுவனத்தில் கல்வி கற்று பரீட்சைகளில் தோல்வியடைந்த மாணவர்களின் தோல்விக்கான காரணங்களை மாணவர்கள் மீதே திணிக்கின்றனர். ஆசிரியர் சேவை என்பது வெறுமனே சம்பளம் பெறுவதற்கான ஒரு வழிமுறையல்ல மாறாக அது

பல்வேறு மாணவர்களின் எதிர்காலத்தினை வளப்படுத்தும் ஓர் உன்னதமான ஊக்கியே ஆகும். ஆனால் சமகாலத்தில் பணத்தினை மையமாகக் கொண்ட கற்பித்தல் முறையே அதிகளவில் காணப்படுகின்றது. இதனடிப்படையில் சமகாலத்தில் மாணவர்களின் கல்வியில் தனியார் வகுப்புக்கள் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை மெய்யியல் ரீதியாக நோக்குவதனை அடிப்படையாக கொண்டதாக இந்த ஆய்வு காணப்படுகின்றது.

இதனை மையமாகக் கொண்டு இந்த ஆய்வானது “ சமகாலத்தில் மாணவர்களின் கல்வியில் தனியார் வகுப்புக்களின் தாக்கம் - ஓர் விமர்சனக் கோட்பாட்டு மெய்யியல் நோக்கு” எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தவகையில் குறித்த பிரச்சினைகளை இனங்காணும் நோக்கிலும் அதற்கான தீர்வுகளை முன்வைக்கும் நோக்கிலும் இவ்வாய்வு அமைகின்றது.

இவ்வாய்வானது ஆறு அத்தியாயங்களை உள்ளடக்கியுள்ளது. முதலாவது அத்தியாயத்தில் ஆய்வு எந்த பிரச்சினையை மையப்படுத்தி, என்ன நோக்கத்திற்காக, எந்தெந்த முறையியலினூடாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதை விளக்கும் ஆய்வு அறிமுகமாகவும் ஆய்வுப் பிரச்சினை, ஆய்வின் நோக்கம், ஆய்வுக் கருதுகோள், ஆய்வுக் கோட்பாடு, ஆய்வு முறையியல், தரவுசேகரிக்கும் முறைகள், இலக்கிய மீளாய்வு, போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. மேற்கொள்ளப்போகும் ஆய்வு தொடர்பான அறிவினைப் பெறுவதற்கு இவ் அத்தியாயம் உதவுகின்றது.

ஆய்வறிக்கையின் இரண்டாவது அத்தியாயத்தில் இலக்கிய மீளாய்வு ஆகும். இவ் ஆய்வுடன் தொடர்புடைய ஏற்கனவே வெளிவந்த புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றினை ஆய்வுடன் தொடர்புபடுத்தி மீளாய்வு செய்வதனைக் குறிக்கும். இலக்கிய மீளாய்வின் மூலம் தான் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினை அறிந்து கொள்வதுடன், ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகளில் தவறவிடப்பட்ட விடயங்களினை ஆய்வு செய்ய வழிவகுக்கின்றது.

மூன்றாவது அத்தியாயத்தில் ஆய்வுப் பிரதேசம் பற்றிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. கோப்பாய் கிராமத்தைப் பற்றிய அறிமுகத்தினை வழங்குகின்றது, ஆய்வுப் பிரதேசத்தின் மக்கள் தொகை தொடர்பான விடயங்களினையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. நான்காவது அத்தியாயத்தில் ஆய்வுமுறையியல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐந்தாவது அத்தியாயத்தில் தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரச்சினைக்கான மாதிரித் தெரிவுகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களிடம் இருந்து பெறப்பட்ட தரவுகளினைப் பகுப்பாய்வுக்குட்படுத்தி பிரச்சினைகளை இனங்காண்பதாகும்.

ஆறாவது அத்தியாயமானது பகுப்பாய்வின் மூலம் பெறப்பட்ட பிரச்சினைகளைக் கூறுவதுடன் பிரச்சினைக்கு ஆய்வாளனால் முன்வைக்கப்படும் தீர்வாலோசனைகளையும், இவ்வாய்வு தொடர்பான முடிவினையும் கொண்டிருக்கும். எனவே ஆய்வுச் செயற்பாட்டில் முக்கியமானதாக விளங்கும் இவ்வாய்வுச் சுருக்கமானது ஆய்வறிக்கை தொடர்பாக முழுமையாக விளங்கிக் கொள்ள உதவுகின்றது.

# பொருளடக்கம் (Contents)

DECLARATION .................... I

உறுதியுரை .................... II

முன்னுரை .................... III

நன்றியுரை .................... IV

ஆய்வுச் சுருக்கம் .................... V

பொருளடக்கம் .................... VII

**அத்தியாயம் ஒன்று – ஆய்வுமுன்மொழிவு**

1.1 ஆய்வுத் தலைப்பு .................... 01
1.2 ஆய்வு அறிமுகம் .................... 01
1.3 ஆய்வு நோக்கங்கள் .................... 06
1.3.1 பிரதான நோக்கம் .................... 06
1.3.2 துணை நோக்கங்கள் .................... 06
1.4 ஆய்வுப் பிரச்சினை .................... 06
1.5 ஆய்வு வினாக்கள் .................... 07
1.6 ஆய்வுக் கருதுகோள் .................... 07
1.7 ஆய்வின் முக்கியத்துவம் .................... 07
1.8 ஆய்வு முறையியல் .................... 08
1.9 ஆய்வின் வரையறை .................... 09
1.10 இலக்கிய மீளாய்வு .................... 09
1.11 ஆய்வு ஒழுங்கமைப்பு .................... 14

**அத்தியாயம் இரண்டு - இலக்கிய மீளாய்வு**

2.1 அறிமுகம் .................... 16

2.2 மெய்யியல் பற்றிய அறிமுகம் .................... 17

2.3 விமர்சனக் கோட்பாட்டு மெய்யியல் .................... 17

2.3.1 விமர்சனக் கோட்பாட்டு வரைவிலக்கணம் .................... 19

2.3.2 விமர்சனக் கோட்பாட்டு பிரிவுகள் .................... 20

2.3.2.1 சமூக விமர்சனக் கோட்பாடு .................... 20

2.3.2.2 இலக்கிய விமர்சனக் கோட்பாடு ........ 21

2.4 விமர்சனக் கோட்பாட்டாளர்களின் கல்வி பற்றிய சிந்தனைகள் ........ 22

2.4.1 அடோர்னோ ........ 22

2.4.2 மக்ஸ் கொக்கைமர் ........ 23

2.4.3 ஹேபர்மாஸ் ........ 24

2.4.4 மார்க்ஹியூஸ் ........ 25

2.5 இலங்கையில் கல்வியின் வரலாற்றுப் பின்னணி ........ 26

2.6 இலங்கையின் தற்போதைய கல்வி முறை ........ 29

2.7 இலங்கையில் கல்வி ரீதியான சவால்கள் ........ 30

2.7.1 வேலையில்லாப் பிரச்சினை ........ 31

2.7.2 அரசின் நிதி ஒதுக்கீட்டுப் பிரச்சினை ........ 31

2.7.3 பாடசாலைக்கு மாணவர் வருகையில் ஒழுங்கின்மை ........ 32

2.7.4 மாணவர்களின் கல்வி பரீட்சையை மையப்படுத்தியிருத்தல் ........ 32

2.7.5 பாடசாலைக்கு வளங்கள் ஒழுங்காக பகிர்ந்தளிக்கப்படாமை ........ 33

2.7.6 வறுமை ........ 33

2.7.7 கல்விக் கொள்கையில் கலைத்திட்டங்களில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள் ........ 34

2.8 கல்வி பற்றிய சிந்தனையாளர்களின் கருத்துக்கள் ........ 34

2.8.1 ரூசோ ........ 34

2.8.2 ஜோன் டுயீ ........ 35

2.8.3 மத்யூ அர்னோல்ட் ........ 35

2.8.4 கார்ள்மாக்ஸ் ........ 36

2.8.5 மகாத்மாகாந்தி ........ 36

2.9 தனியார் வகுப்புக்களின் தோற்றம் ........ 36

2.10 தனியார் வகுப்புக்கள் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற கல்விப் பின்னணிகள் ........ 39

2.11 தனியார் வகுப்புக்கள் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற அரசியல் பின்னணிகள் ........ 42

2.12 தனியார் வகுப்புக்கள் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற பொருளாதாரப் பின்னணிகள் ........ 43

2.13 தனியார் வகுப்பின் தேவை ........ 46

2.14 தனியார் வகுப்பின் தாக்கம் ........ 46

2.14.1 மாணவர்களின் கல்வியில் தனியார் வகுப்புக்களின் தாக்கங்கள் ........ 47

2.15 ஏனைய ஆய்வுகள் மற்றும் இலங்கியங்கின் இலக்கிய மீளாய்வு ........ 50

2.16 அத்தியாயச் சுருக்கம் ........ 57

அத்தியாயம் மூன்று – ஆய்வுப் பிரதேசம்

3.1 அறிமுகம் ........ 58

3.2 பௌதீக அம்சங்கள் ........ 59

3.3 ஆய்வுப் பிரதேச பொருளாதார நடவடிக்கைகள் ........ 60

3.3.1 விவசாயம் ........ 60

3.3.2 கைத்தொழில் ........ 61

3.3.3 கூலித்தொழில் ........ 61

3.4 ஆய்வுப் பிரதேச சமூகம்சார் விடயங்கள் ........ 62

3.4.1. சனத்தொகை ........ 62

3.4.2. போக்குவரத்து ........ 64

3.4.3 கல்வி ........ 64

3.4.3.1 பாடசாலைகள் விபரம் ........ 65

3.4.3.2 தனியார் வகுப்புக்களின் விபரம் ........ 67

3.4.3.3 ஆய்வுக்குட்படுத்திய மாணவர், ஆசிரியர், அதிபர் விபரம் ........ 68

3.5 அத்தியாயச் சுருக்கம் ........ 69

அத்தியாயம் நான்கு – ஆய்வுமுறையியல்

4.1 அறிமுகம் ........ 70

4.2 ஆய்வின் பிரதான நோக்கமும், உப நோக்கங்களும் .......................................... 70

4.2.1 பிரதான நோக்கம் .......................................... 70

4.2.2 உபநோக்கங்கள் .......................................... 70

4.3 மாதிரி தெரிவுமுறை .......................................... 71

4.4 ஆய்வுக் கருவிகள் .......................................... 72

4.4.1 முதலாம் நிலைத்தரவு .......................................... 72

4.4.1.1 வினாக்கொத்து .......................................... 73

4.4.1.2 நேர்காணல் .......................................... 74

4.4.1.3 மையக் குழுகலந்துரையாடல் .......................................... 74

4.4.1.4 அவதானம் .......................................... 74

4.4.2 இரண்டாம்நிலைத் தரவுகள் .......................................... 75

4.5 ஆய்வுக் கருவிகளின் நம்பகத்தன்மை அல்லது ஆய்வொழுக்கப் பண்பும் ஆய்வறமும். 75

4.6 தரவுகளின் பகுப்பாய்வு .......................................... 77

4.7 அத்தியாயச் சுருக்கம் .......................................... 77

**அத்தியாயம் ஐந்து – தரவுப் பகுப்பாய்வும், கலந்துரையாடலும்**

5.1 அறிமுகம் .......................................... 78

5.2 தனிப்பட்ட தகவல்கள் .......................................... 78

5.2.1 ஆய்வுக்குட்படுத்தப்பட்டோர் பற்றிய விபரம்.......................................... 78

5.2.2 கல்விநிலை .......................................... 79

5.2.3 வயதினடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டோர் பற்றிய விபரம் .......................................... 80

5.2.4 தனியார் வகுப்புக்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பற்றிய விபரம் .......................................... 81

5.3 வினாக்கொத்துப் பகுப்பாய்வு ..........................................82

5.3.1. மாணவர்களுக்கான வினாக்கொத்துப் பகுப்பாய்வு ..........................................82

5.3.1.1 பரீட்சையில் உயர் பெறுபேற்றினைப் பெற மிகவும் பயனுடையதாக காணப்பட்டது தனியார் கல்வியா அல்லது பாடசாலைக்கல்வியா என்பதனைக் கண்டறிதல்.......................................... 82

5.3.1.2 தனியார் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் போது மாணவர்களின் மனநிலை எவ்வாறு காணப்படுகின்றது என்பதனைக் கண்டறிதல்........................................................................ 82

5.3.1.3 பாடசாலையில் கல்வி கற்கும் போது மாணவர்களின் மனநிலை எவ்வாறு காணப்படுகின்றது என்பதனைக் கண்டறிதல்........................................................................ 84

5.3.1.4 மாணவர்களை தனியார் வகுப்புக் கற்றலிற்கு செல்ல தூண்டிய காரணிகளைக் கண்டறிதல்...................................................................................................... 84

5.3.1.5. பாடசாலையில் மாலை நேரத்தில் மேலதிக கற்றல் நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு மாணவர்களின் விருப்பத்தினைக் கண்டறிதல்...................................... 85

5.3.1.6 பாடசாலைக் கற்பித்தல் முறைக்கும், தனியார் வகுப்புக் கற்பித்தல் முறைக்கும் இடையிலான வேறுபாட்டினைக் கண்டறிதல்.......................................................... 86

5.3.1.7 மாணவர்கள் தனியார் வகுப்புக் கற்றலில் எத்தனை மணித்தியாலங்கள் ஈடுபடுகின்றனர் என்பதைக் கண்டறிதல்................................................................................................ 88

5.3.1.8. தனியார் வகுப்புக் கற்றலுக்காக மாதாந்தம் ஏற்படுகின்ற செலவினைக் கண்டறிதல்.89

5.3.1.9 தனியார் வகுப்புக்களில் கல்வி கற்பதன் மூலம் மாணவர்கள் பெற்றுக் கொள்கின்ற நன்மைகளைக் கண்டறிதல்...................................................................................... 89

5.3.1.10 தனியார் வகுப்புக்களில் கல்வி கற்பதன் மூலம் மாணவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைக் கண்டறிதல்..................................................................................90

5.3.2 உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான வினாக்கொத்து பகுப்பாய்வு................ 91

5.3.2.1 தனியார் வகுப்பிற்குச் சென்று கல்வி கற்ற மாணவர்களை இனங்காணல்................... 91

5.3.2.2 பரீட்சையில் அதிஉயர் புள்ளிகளைப் பெறுவதற்கு தனியார் வகுப்புக் கற்றலா, பாடசாலைக் கற்றலா அதிக பயனுடையதாக இருந்தது என்பதைக் கண்டறிதல்.................. 92

5.3.2.3 தனியார் வகுப்பில் பரீட்சை மாதிரி வினாக்கள் முன்கூட்டியே வழங்கப்பட்டு கற்பிக்கப்பட்டமை தொடர்பாக கண்டறிதல்..........................................................93

5.3.2.4 தனியார் வகுப்புக் கற்றலினால் மாணவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருப்பதனை கண்டறிதல்........................................................................ 93

5.3.2.5 மாணவர்கள் தனியார் வகுப்புக் கற்றலில் அதிக ஈடுபாடு கொள்வதற்கான காரணங்களைக் கண்டறிதல்.......................................................................... 94

5.3.2.6 மாணவர்கள் எத்தகைய பாடங்களுக்கு தனியார் வகுப்பிற்குச் செல்கின்றனர் என்பதனைக் கண்டறிதல்............................................................................... 95

5.4 நேர்காணல் பகுப்பாய்வு................................................................................. 96

5.4.1. அதிபருடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலுக்கான பகுப்பாய்வு........................................ 96

5.4.1.1 சமகாலத்தில் தனியார் வகுப்புக்கள் அதிகரித்து காணப்படுகின்றமைக்கான காரணங்களினை கண்டறிதல்........................................................................................................ 97

5.4.1.2 தனியார் வகுப்பிற்குச் செல்லும் மாணவர்கள் தான் உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்கின்றனர் என்கின்ற கருத்திற்கான விடையினைக் கண்டறிதல்............................................ 98

5.4.1.3 பாடசாலையில் ஆசிரியர்கள் பெற்றுக் கொள்கின்ற வேதனத்தின் அளவு குறைவாக காணப்படுவது தான் தனியார் வகுப்புக்கள் உருவாக காரணமாக காணப்படுகின்றதா என்பதைப் கண்டறிதல்........................................................................................................................ 100

5.4.2 கல்வியாளர்களிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலுக்கான பகுப்பாய்வு........................... 101

5.4.2.1 தனியார் வகுப்புக்களிற்கு அதிகளவில் மாணவர்கள் செல்வதற்கு அடிப்படையாக அமைகின்ற காரணிகளினைக் கண்டறிதல்............................................................................ 102

5.4.2.2 தனியார் வகுப்புக்களுக்கு மாணவர்கள் செல்லாமல் தடுப்பதற்கான வழிகளினைக் கண்டறிதல்........................................................................................................................ 102

5.4.2.3 சமகாலத்தில் தனியார் வகுப்புக்களின் அதிகரிப்பானது மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களைக் கண்டறிதல்........................................................................ 103

5.4.3 தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணலுக்கான பகுப்பாய்வு........................................................................................................................ 103

5.5 மையக்குழு கலந்துரையாடலுக்கான பகுப்பாய்வு............................................................ 104

5.6 அவதானத்துக்கான பகுப்பாய்வு........................................................................................ 107

5.7 பகுப்பாய்வும் கலந்துரையாடலும்..................................................................................... 108

5.8 ஆய்வுத் தகவல்கள்......................................................................................................... 109

5.8.1. உளவியல் ரீதியான தாக்கங்கள்..................................................................................... 109

5.8.1.1. தனியார் வகுப்புக்களினால் மாணவர்கள் உளவியல் ரீதியில் தாக்கங்களை எதிர் கொண்டுள்ளனர்........................................................................................................................ 111

5.8.2 பொருளாதார ரீதியான தாக்கங்கள்................................................................................. 111

5.8.2.1. தனியார் வகுப்புக்களினால் மாணவர்கள் பொருளாதார ரீதியில் தாக்கங்களை எதிர் கொண்டுள்ளனர்........................................................................................................................ 112

5.8.3. கலாசார ரீதியான தாக்கங்கள்........................................................................................ 113

5.8.3.1. தனியார் வகுப்புக்களினால் மாணவர்கள் கலாசார ரீதியில் தாக்கங்களை எதிர் கொண்டுள்ளனர்........ 114

5.8.4 தனியார் வகுப்புக்கள் ஏற்படுத்துகின்ற ஒழுக்க ரீதியான தாக்கங்கள்........ 114

5.8.4.1. தனியார் வகுப்புக்களினால் மாணவர்கள் பொருளாதார ரீதியில் தாக்கங்களை எதிர் கொண்டுள்ளனர்........ 115

5.8.5 தனியார் வகுப்புக்கள் சமூகத்தில் ஏற்படுத்துகின்ற தாக்கங்கள்........ 115

5.8.6 இன்றைய மாணவர் சமுதாயமும் தனியார் வகுப்புக்களும்........ 118

5.8.7 இலங்கையில் தனியார் வகுப்புக்களின் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்........ 121

5.8.8 தனியார் வகுப்புக்கள் மாணவர்களின் கல்வியில் ஏற்படுத்துகின்ற தாக்கங்களும் அதற்கான தீர்வுகளும்........ 122

5.9 அத்தியாயச் சுருக்கம்........ 129

**ஆறாம் அத்தியாயம் - முடிவுரைகளும், பரிந்துரைகளும்**

6.1 முடிவுரை........ 130

6.2 கருதுகோள் பரிசீலணை........ 132

6.3 பரிந்துரைகள்........ 134

6.4 மேலதிக ஆய்வுகளுக்கான அபிப்பிராயம்........ 137

6.6 அத்தியாயச் சுருக்கம்........ 137

உசாத்துணைகள்........ 138

பின்னிணைப்பு 01........ 143

பின்னிணைப்பு 02........ 149

பின்னிணைப்பு 03........ 152